සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**දෙවන වාර පරීක්ෂණය 2018** — **11 ශ්‍රේණිය**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2018** — **தரம்11**
**Second Term Test 2018** — **Grade 11**

**දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I**
**தமிழ் மொழியும் இலக்கியமும் I**
**Tamil Language & Literature I**

**පැය එකයි**
**ஒரு மணித்தியாலம்**
***One hour***

*கவனிக்க வேண்டியவை*

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- *1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

1. ‘புலங்களோடு **கரணமும்** ஆவியும்’ இங்கு கரணம் என்பது.
(1) புத்தி (2) ஒளி (3) மனம் (4) உயிர்

2. ‘**மேழி** பெருக வேண்டும் தம்பிரானே’ இங்கு மேழி என்பது
(1) கலப்பை (2) செல்வம் (3) ஏர் (4) பானை .

3. ‘**அந்தரங்கக்** கட்டளைகளையெல்லாம் அது நிராகரித்து’ அந்தரங்கம் என்பதன் எதிர்கருத்து.
(1) பகிரங்கம் (2) உள்ரங்கம் (3) வெளிரங்கம் (4) அரங்கம்

4. ‘நாம் சினிமாவைப் புலனளவில் மட்டுமே **அணுகு**வோம்’ அணுகல் என்பதன் எதிர்கருத்து
(1) நெருங்கல் (2) சேர்தல் (3) புரிதல் (4) விலகல்

5. ‘நாத **மூன்றுரு** வான குற்றால நாதர்’ இங்கு மூன்றுருக்களாக குறிப்பிடப்படுவார்கள்
(1) இந்திரன் , விஷ்னு , பிரம்மன் (2) இந்திரன் , விஷ்னு , மன்மதன்
(3) சிவன் , விஷ்னு . பிரம்மன் (4) பிரம்மன் , கிருஷ்ணன் , விஷ்னு .

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

6. ‘இப்பொழுது அச்சடித்தல் பிரின்டர் க்ர்க் , க்ர்க் என்று ஊரையே கூட்டிவிடும்’ பிரின்டர் என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
(1) கையெழுத்துப் பொறி (2) சுருக்கெழுத்துப் பொறி
(3) தட்டச்சுப் பொறி (4) பேனா செலுத்தி

7. ஒத்தகருத்துள்ள சொற்களின் இணைப்பு
(1) மெய்ம்மை - பொய்ம்மை (2) பாகுபாடு - மாறுபாடு
(3) வல்லினம் - மெல்லினம் (4) ஆதரவு - அநாதரவு

8. சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் எடிட்டிங் (Editing) ஆகும். இங்கு எடிட்டிங் என்பதற்கு நிகராக தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) படத்தொகுப்பு (2) காட்சி (3) ஒளிப்பதிவு (4) திரை

9. பிஞ்சு , தழும்பு , காயம் என்னும் பொருள்களைத் தரும் ஒரு சொல்
(1) மடு (2) மெய் (3) கவி (4) வடு

10. உழுந்தின் உள்ளீடு பருப்பு என்பது போல கோதுமையின் உள்ளீடு
(1) முத்து (2) விதை (3) அரிசி (4) சோறு

11. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி அல்லாதது
    (1) தட தட (2) துடி துடி (3) பட பட (4) குடு குடு

12. பேச்சுறுதி தவறுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
    (1) நாக்குத் தப்புதல் (2) நாக்கு வளைத்தல்
    (3) நாவசைத்தல் (4) நாக்கு நீட்டுதல்

13. பேணிக்காத்துத் தருமாறு பொருளை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்
    (1) ஒப்பரவு (2) ஒத்திகை (3) ஓலக்கம் (4) ஓம்படை

14. நெடுங்காலம் வாழ்பவன்
    (1) சிரஞ்சீவி (2) தீர்க்கதரிசி (3) நைட்டிகள் (4) விகடகவி

15. காலம் எமக்காக காத்திருப்பதில்லை என்பதை உணர்த்தும் பழமொழி
    (1) ஏற்றமுண்டால் இறக்கமும் உண்டு
    (2) திக்கற்றவனுக்கு தெய்வமே துனை
    (3) ஐயர் வருகிற வரை அமாவாசை காத்திருக்குமா?
    (4) பேராசை பெரு நட்டம்

16. குப்பையிலே போட்டாலும் குன்டுமணி மங்காது என்ற பழமொழியின் கருத்து
    (1) தகுதிக்கு மேல் எண்ணக் கூடாது
    (2) குண்டுமணி குப்பையில் இருந்தாலும் அதே நிறத்தில் தான் இருக்கும்
    (3) எதையும் அளவோடு செய்தல் வேண்டும்
    (4) தகுதியுடையவர் எந்நிலையிலும் தமது தகுதியை இழக்கமாட்டார்கள்

17. மிகுந்த அழகினைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் உவமைத் தொடர்
    (1) தாமரை இலைத் தண்ணீர் போல
    (2) தாரகை நடுவண் தண்மதி போல
    (3) சூரியன் முன் மின்மினி போல
    (4) சூரியனைக் கண்ட தாமரை போல

18. ஒருவர் சிறந்த ஒழுக்க நெறியுள்ளவராயும் அறிவில் சிறந்தராகவும் இருத்தல் என்பதனைக் குறிக்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
    (1) காரியத்தில் கண்ணுங் கருத்ததுமாய் (2) கருவிலே திருவுடையார்
    (3) கல்வியறிவொழுக்களில் சிறந்து (4) செய்வன் செய்து தவிர்வள தவிர்த்து

19. ‘கங்கு கரை’ என்பது
    (1) அடுக்குத் தொடர் (2) இணைமொழி
    (3) இரட்டிக்கிளவி (4) அடுக்கிடுக்குத் தொடர்

20. ‘பூனையின் குரலைக் கேட்டது சுண்டெலி சரலென ஓடி ஒளித்தது’ இங்கு சரலென என்னும் ஒளிக்குறிப்புச் சொல் உணர்த்துவது.
    (1) விரைவு (2) பயம் (3) கோபம் (4) தந்திரம்

➢ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க

21. ‘த’கரம் எந்தச் சொல்லில் ‘வு’ என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது
    (1) வேதம் (2) சிந்தனை (3) விந்தை (4) பாத்திரம்

22. பின்வருவனவற்றுள் பெயர்ப் பகு பதமாக அமைவது
    (1) அறிஞன் (2) மரம் (3) நிலம் (4) வானம்

23. பின்வருவற்றுள் ஆக்கப் பெயரடையாக அமைவது.
    (1) நல்ல (2) விசாலமான (3) மெல்ல (5) முன்பு

24. பின்வருவனவற்றுள் பண்புத் தற்கிழமையாக அமைவது
(1) பறவைகளது கூட்டம் (2) நெல்லினது பொறி
(3) எனது கருமை (3) மாலனது கண்

25. ‘இங்கே வாருங்கள்’ - இங்கு வாருங்கள் என்பது
(1) தன்மை வினைமுற்று (2) வியங்கோள் வினைமுற்று
(3) முன்னிலை வினைமுற்று (4) படர்க்கை வினைமுற்று

26. திரிதல் விகாரப் புணர்ச்சி இடம் பெற்ற சொல்.
(1) நீலவானம் (2) பொற்குடம் (3) மரவேர் (4) கடலலை

27. ‘ காகம் போல் அவன் விழுந்தவனின் வேலி ஓரமெல்லாம்’ இங்கு விழுந்தவள் என்பது.
(1) வினைமுற்று தொடர் (2) வினையெர்த் தொடர்
(3) வினைச் சொல் (4) வினையாலணையும் பெயர்

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற்றொகுதி.
(1) காகிதம் , கீர்த்தி , கூட்டம் , கேள்வி (2) சாட்சி , ஞாயிறு , தண்ணீர் , பம்பரம்
(3) வேதம் , மந்திரம் , காற்று , மாத்திரம் (4) சட்டம் , சூரியன் , சேவை , சோளம்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.
(1) பெயர்ச் சொல் - மரம் , நிலம் , மனிதன் , கடல்
(2) வினைச்ொசல் - படித்தான் , சிரித்தான் , நடந்தான் , ஓடினான்
(3) உரிச் சொல் - சால , தவ , இனி , தடி
(4) இடைச் சொல் - ஆக , கள் , மார் , ஆன்

30. (1)எழுவாய்த் தொடர் -கமலா வந்தான், தம்பி சென்றான், காகம் கரைந்தது, மரம் விழந்தது
(2)விளித்தொடர் -தம்பி படி, மகனே! வா, சிறுவன் அழதான், கண்ணா! வா,
(3)வினைமுற்றுத்தொடர் -படித்தாள் சுமதி, விழந்தது மரம், பாடினாள் மாலா, அழதாள் சிறுமி
(4)உரிச் சொற்றொடர் -கடி நகர், உறுதுனை, தவப்புதல்வன், சாலவும் நன்று

➢ புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான
…………………………….. ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
(1) பிரேரணை (2) உடன்படிக்கை (3) ஆவணம் (4) தீர்மானம்

32. நாட்டில் அச்சிட்டு வெளியிடப் பெற்ற நூல்கள் , பத்திரிகைகள் , துண்டுபிரசுரங்கள்
முதலானவற்றின் பிரதிகள் தேசிய ……………………………. பேணப்பட்டு வருகின்றன.
(1) பாராளுமன்றத்தில் (2) திறை சேரியில்
(3) நூதனசாலையில் (4) சுவடிகள் கூடத்தில்

33. இக்காலத்தில் வெளிவரும் கவிதைகள் சில ……………………………… இல்லாத வெறுஞ் சொற் கோப்புகளாகவே காணப்படுகின்றன.
(1) அடியீடு (2) குறியீடு (3) உள்ளீடு (4) வகையீடு

34. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக் குழு செய்த
………………………….. அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப் படுகின்றது
(1) மதிப்புரை (2) பரிந்துரை (3) பதிப்புரை (4) முன்னுரை

➢ வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க

35. கடந்த ஆண்டு நடைபெற்ற கிரிக்கட் சுற்றுப் போடடியில் இலங்கை அணி வெற்றிக
கிண்ணத்தை.
(1) சுவீகரித்தனர் (2) சுவீகரித்தது (3) சுவீகரித்தன (4) சுவீகரித்தார்

36. தான் பிறந்த நாட்டையும் தன் தாய்மொழியையும் தேசிக்காதவன.
(1) மனினேயல்ல (2) மனிதனேயல்லான் (3) மனிதரேயல்ல (4)மனிதனேயல்லன்

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களும் விடை எழுதுக.

விண்மீன்கள் கண்சிமிட்டி
விளையாடும் வேளையிலே
கண்கசக்கிந் தன் கசக்கி
அறியாக் கந்தை உடலியே தவழ
ஒழுகும் பனிநீரைத் தாங்க
உடலில் வேற்றுடை எதுவுமின்றி
ஆடிப் போகிறான் களனி நோக்கி

37. இங்கு கவிஞர் கூறுவது.
(1) காலைக்காட்சி
(2) சூரியன் அஸ்தமிக்கும் காட்சி
(3) இரவக் காட்சி
(4) மாலைக் காட்சி

38. இப்பாடலில் காணப்படும் அணி
(1) உவமை (2) உருவகம் (3) தன்மை நவிற்சி (4) சிலேடை

39. உழவனின் வறுமை நிலை எவ்வாறு குறிப்பிடப்படுகிறது
(1) கண் கசக்கி தன் கசக்குதல்
(2) கந்தை உடை அணிதல்
(3) ஆடிக் கொண்டு செல்ல
(4) பனி நீரைத் தாங்க உடை இன்மை

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க
(அ) நடு என்பது வளர்ச்சிக் கட்டமாகும்
(ஆ) சிறுகதை ஒன்றிக்கு தொடக்கம் , நடு , முடிவு ஆகியன உண்டு
(இ) சிக்கலான கதையிலே இந்த நடுக்கட்டம் இரு கட்டங்களாக அமையும்
(ஈ) இங்கே வாசகரின் முடிவடையும் வேட்கை உச்ச நிலையடையும்
(உ) உச்சகட்டம் என்பது முடிவுக்கு முந்தியறிவாகும்

(1) இ , உ , ஈ , அ , ஆ
(2) ஆ , அ , இ , உ , ஈ
(2) ஆ , இ , அ , உ , ஈ
(4) இ , உ , ஆ அ , ஈ